2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரியிலிருந்து பரிகம் கிராமம் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், தருமபுரியிலிருந்து ஈசல்பட்டி வரை 30 கி.மீ. செல்லும் நகரப் பேருந்து தடம் எண் 29—ஐ நீட்டித்து இயக்கினால் நீளம் 34 கி.மீ. வருவதாலும், கோரிக்கைப்படி அப்பேருந்தினை ஈசல்பட்டியிலிருந்து பரிகம் வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலையுள்ளதால், இத்திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

32—

கரும்புக் கழிவு

***30068—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இரண்டரை கோடி டன் அளவிற்கு கரும்புக் கழிவு (மொலாசஸ்) தேங்கிக் கிடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.